**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
***ஒ.எஸ்.2/2021***
**2025-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் நாள் வியாழக்கிழமை**

**வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண். 44வது பிரிவு 6(1)ன்படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.எஸ்.செல்லபாண்டியன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: சார்லஸ்** | **சாதி** | **:** |
| **த-பெ** | **:** | **சமயம்** | **:** |
| **கிராமம்** | **:** | **தொழில்** | **:** |
| **வட்டம்** | **:** | **வயது** | **:** |

**வா.சா. 2 சார்லஸ் ஆஜர்.**

**(இடைநிலை மனு எண்.1/2024 நாள்.17.02.2025ம் தேதி அனுமதியளிக்கப்பட்டதன் பேரில் சாட்சி விசாரணை செய்யப்படுகிறார்).**

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 2வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பில் பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.
பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3, 4, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னுடைய பெயர் சார்லஸ் அல்ல ஆரோக்கிய சார்லஸ் என்றால் முழுபெயர் ஆரோக்கிய சார்லஸ் எல்லாரும் சார்லஸ் என்று அழைப்பார்கள். நான் இவ்வழக்கின் 8ம் பிரதிவாதி ஆவேன். ஒன்பது பிரதிவாதி மெர்சி எனது உடன்பிறந்த சகோதரி ஆவார். நான் இவ்வழக்கில் 8ம் பிரதிவாதியாக ஆஜராகவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நானும், வாதியும் சுமூகமாக தான் இருந்தோம் என்றால் சரிதான்.

இவ்வழக்கில் ஏன் ஆஜராகவில்லையென்றால் வர இயலவில்லை. என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தாத்தாவுடைய சொத்தை பிரித்து தரக்கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் 365/3, 365/6,66/1 ஆகும். தாவா சொத்துக்களின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும் 41 செண்ட், 91 செண்ட், 5 ஏக்கர் 84 செண்ட் ஆகும். தாவா சொத்துக்களின் நான்குமால் விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா 4வது இலக்க சொத்தின் வீட்டின் கதவு எண்.156 ஆகும். தாவா சொத்துக்களை எப்பொழுது பார்த்தீர்கள் என்றால் அடிக்கடி பார்ப்பேன் போன மாதமும் பார்த்தேன். தாவா 4வது இலக்க சொத்தில் வீட்டில் தற்பொழுது 3ம் பிரதிவாதி வியாகுலமேரி குடியிருந்து வருகிறார். சவரிமுத்து எப்பொழுது இறந்தார் என்று எனக்கு தெரியாது. அப்போது நான் பிறக்கவில்லை.

சவரிமுத்துவுக்கு சாமிநாதன் பிள்ளை, ஆரோக்கியம், குழந்தைச்சாமி, ஞானரத்தினம், லூர்து, ராஜாமணி ஆகியோர்கள் அவரது மக்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சவரிமுத்துவின் உடன்பிறந்த சகோதர, சகோதரிகளை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்பது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா சாமிநாதன் பிள்ளை 1985ல் இறந்து விட்டார். மேற்படி சாமிநாதன் பிள்ளைக்கு செல்வநாயகம்மாள், பார்வர்அம்மாள், அந்தோணிசாமி, எனது தகப்பனார் வேதமாணிக்கம், வாதி செபஸ்தியம்மாள் ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான்.

செல்வநாயகம்மாளுக்கு எத்தனை வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. செல்வநாயகம்மாள் 50வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் 1972ல் இறந்துவிட்டார். செல்வநாயகம்மாள் கணவர் மரியநாயகம் காலமாகிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. செல்வநாயகம்மாள், மரியநாயகம் ஆகியோர்களுக்கு வேதநாயகம், ஜான்போஸ்கோ, 2ம் பிரதிவாதி ஜெபமாலை,

ஜேம்ஸ் ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் அக்கா வேதநாயகம் தற்பொழுது உயிருடன் உள்ளார் என்றால் சரிதான்.

2ம் பிரதிவாதி ஜெபமாலையின் உடன்பிறந்த சகோதரர் இறந்துபோன ஜான்போஸ்கோ என்பவரும் மனைவி ஜெனிபர் (எ) பாக்கியத்தையும் அவரது மக்கள் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி ஜெபமாலையின் மூத்த சகோதரி வேதநாயகம் என்பவரை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி பார்வர் அம்மாளுக்கு திருமணம் ஆகவில்லை.

செல்வநாயகம் உயிருடன் இருந்த வரையில் தாவா சொத்து சம்மந்தமாக தனக்கு பாக உரிமை இருப்பதாக ஏதும் கேட்டுள்ளேனா என்றால் நான் பிறக்கும் முன்பே அவர் இறந்துவிட்டார் எனது பெரியப்பா மற்றும் மற்ற நபர்களிடம் கேட்டேன். 1ம் பிரதிவாதி தனக்கு பாகம் இருப்பதாக பாக உரிமை கேட்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 4வது இலக்க சொத்தில் 2ம் பிரதிவாதி குடியிருந்து வந்தாரா என்றால் எல்லாரும் சேர்ந்து குடியிருந்தோம்.

மேற்படி வீடு அந்தோணிசாமிக்கு தேவைப்பட்டதால் மேற்படி வீட்டிலிருந்து காலி செய்ய 2ம் பிரதிவாதி ஜெபமாலை சம்மதித்தார் எனில் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வீட்டிற்கு ரூ.10,000/- அந்தோணிசாமி 2ம் பிரதிவாதி ஜெபமாலைக்கு கொடுத்துவிடுவதாக ஒப்புக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்தோணிசாமி ஒப்புக்கொண்டபடி 01.05.1998ம் தேதி ரூ.5000/-ம் 03.06.1998ம் தேதி ரூ.5000/-ம் 2ம் பிரதிவாதியிடம் கொடுத்தார் எனில் அது பற்றி எனக்கு தெரியாது.

தாவா 4வது இலக்க சொத்தை பொறுத்து அந்தோணிசாமி 2ம் பிரதிவாதி கடந்த 01.05.1998ம் தேதி விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்தார் எனில் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் அனைத்தும் அந்தந்த காலக்கட்டத்திலே நன்கு தெரியும்

என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி கிளாரா புஷ்பம் மனநிலை சரியில்லாதவர் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியின் பராமரிப்பில் உள்ளார் என்றால் சரிதான்.

தாவா 1, 2, 3 லக்க சொத்துக்கள் உள்ளிட்ட சாமிநாதன் பிள்ளை இதர சொத்துக்களை பொறுத்து 29.12.2005ம் தேதி பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான் எனது தகப்பனாருக்கு கண் தெரியாததால் நான் உடனிருந்தேன், எனது அப்பாவும், பெரியப்பாவும் மட்டும் இருந்து எழுதிக்கொண்டார்கள். பாகம் எழுதிக்கொண்டதில் அதனை ஊர்ஜிதப்படுத்தும்விதமாக 29.12.2005ம் தேதி சொத்து பிரித்தல் விவரம் என்ற தலைப்பில் எழுத்து மூலமாக ஆவணம் எழுதிக்கொள்ளப்பட்டுள்ளது எனில் அது பற்றி எனக்கு தெரியும்.

மேற்படி பாகத்தில் 1 முதல் 3 லக்க சொத்துக்கள் அந்தோணிசாமிக்கு ஒதுக்கப்பட்டதா என்றால் சரிதான். எங்கள் அப்பாவுக்கும் அந்தோணிசாமிக்கு ஒதுக்கப்பட்டது. தாவா 1 முதல் 3 லக்க சொத்துக்கள் அந்தோணிசாமி பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது தாத்தா பெயரில் பட்டா உள்ளது. வாதி வழக்கை தாக்கல் செய்யும் போது தாவா சொத்துக்கள் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் எனது தாத்தா பெயரில் இருந்தது. தாவா வழக்கு தாக்கல் செய்யும் போது தாவா சொத்துக்கள் அந்தோணிசாமி பெயரில் பட்டா இருந்தது என்றால் எனக்கு தெரியாது.

பட்டாவை ரத்து செய்து கூட்டுபட்டா வேண்டி வருவாய்த்துறையில் மனு கொடுத்துள்ளீர்களா என்றால் கொடுக்கவில்லை. தாவா 4வது இலக்க சொத்துக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது அக்கா ஜெஸ்டின் ஆரோக்கிய செல்வி பெயரில் உள்ளது. தாவா 4வது இலக்க சொத்துக்கு வீட்டு வரிரசீது, மின்வரி ரசீது யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கு எனக்கு பாகம் உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் பட்டா கொடுத்துள்ளேன்.

தாவா சொத்து அந்தோணிசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து உரிமையில்லாத 2ம் பிரதிவாதி ஜெபமாலை தனது மகன் டொமிக்ராஜ் என்பவருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்க உரிமையில்லை என்ற அடிப்படையில் மேற்படி 21.09.2020ம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட வேண்டியது என்றால் ஆம். ஆனால் அந்தோணிசாமிக்கு எனது தந்தை வேதமாணிக்கத்திற்கும் பாத்தியப்பட்ட சொத்தாகும்.

நீங்கள், வாதி , 2ம் பிரதிவாதியுடன் நன்றாக பேசிவீர்கள் என்றால் எல்லோருடனும் நன்றாக பேசுவேன். 2ம் பிரதிவாதியின் உடன்பிறந்தவர்களிடமும் நான் நன்றாக பேசுவேன். நானும், 2ம் பிரதிவாதி ஜெபமாலையும், வாதியுடன் கூட்டு சேர்ந்து இந்த 3 முதல் 7 பிரதிவாதிகளை மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களின் மீதான பாக அனுபவத்தில் அடிப்படையில் தான் தாவா சொத்தை தங்களுக்குரிய பாகத்தினை 5, 6, 7 பிரதிவாதிகள் சேர்ந்து மேற்படி 3, 4 பிரதிவாதிகளுக்கு 11.11.2020ம் தேதி பாகபாத்திய விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் நான் இல்லாமல் எழுதிக்கொடுத்துள்ளார்.

18.11.2020ம் தேதிய ஆவணம் பாகபாத்திய விடுதலை ஆவணம் சட்டப்படி ஏற்பட்ட ஆவணம் அதனை ரத்து செய்ய வேண்டிய அவசியமில்லை எனில் ரத்து செய்ய வேண்டும். தாவா சொத்துக்களை நான் அனுபவம் செய்து வருவது தவறு என்றால் எல்லாரும் சேர்ந்து அனுபவம் செய்து வருகிறோம். தாவா 1 முதல் 3 இலக்க சொத்துக்களில் அந்தோணிசாமியும் தற்பொழுது மேற்படியாரின் வாரிசுகள் விவசாயம் செய்து அனுபவம் செய்து வருகின்றனர் எனில் சரியல்ல.

தாவா சொத்துக்களில் உங்களுக்கு, பிரதிவாதிகளுக்கோ, வாதிக்கோ எவ்வித பாகமோ, பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை தவிர்த்து வேறு பல இலக்க சொத்துக்கள் சாமிநாதன் பிள்ளை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. தாவா சொத்துக்கள் 3 முதல் 7 பிரதிவாதிகளுக்கு தனித்த அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. பொதுவான அனுபவத்தில் உள்ளது.

**10 முதல் 12ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது தாத்தா சாமிநாதன் பிள்ளைக்கு 5 வாரிசுகள் என்றால் சரிதான். தாவா வழக்கில் உள்ள 4 இலக்க சொத்துக்களும் எனது தாத்தா சாமிநாதன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா சாமிநாதன் பிள்ளை உயிருடன் இருந்த காலக்கட்டத்தில் வாதி செபஸ்தியம்மாளுக்கு திருமணம் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 1981ல் பிறந்தேன். எனது தாத்தா 1985ல் இறந்தார் என்றால் சரிதான். எனது தாத்தா உயிருடன் இருந்த காலக்கட்டத்தில் வாதி பாகம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா இறந்த பின்பு தான் ஆண்வாரிசுகளான எனது அப்பாவும், பெரியப்பாவும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

பாகம்பிரித்துக்கொண்டதால் தான் அதனடிப்படையில் தான் மானாமதுரை சார்பதிவகத்தில் பத்திர பதியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் உங்களுக்கு உரிமை உள்ளது என்பதற்கு நீங்கள் தனியாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பத்திர பதிவு சம்மந்தமாக ரத்து செய்வதற்கு நீங்கள் 11, 12ம் பிரதிவாதி அலுவலகத்தில் மனுக்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. இந்த அலுவலகத்தில் முறையான வருவாயத்துறை ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் அடிப்படையில் பத்திர பதிவு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**District Munsif,**
**Manamadurai.**